விலை ரூபா: 10.00

# வலம்புரி

பக்கங்கள்: நான்கு

*Valampurii*


சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 22 வியாழக்கிழமை (05.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107



ராம்கோ சீமெந்து

## அரசில் இணைந்துள்ள எம்.பிக்கள் மீண்டும் ஐ.தே.கவில் இணைவர்

### ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இணைந்து அதன் அமைச்சரவையில் சேர்ந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் சிலர் மீண்டும் கட்சியில் இணைவதற்கு அனுமதி கோரியுள்ளனர் என்று அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நான் அவர்களில் சிலரையே கட்சியில் மீண்டும் இணைய அனுமதிப்பேன். ஏனை (04 ஆம் பக்கம் பார்க்க)

## சகலரும் ஏற்கக் கூடிய தீர்வு விரைவில் முன்வைக்கப்படும்

### பௌச்சரிடம் ஜனாதிபதி உறுதி



(புதுடில்லி)

நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை விரைவில் முன்வைக்கவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் றிச்சர்ட் பௌச்சரை புதுடில்லியில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க சர்வதேசம் எடுத்துள்ள முயற்சியை திசை திருப்ப அரசு முயற்சிக்கின்றது

## மீசாலை - புத்தூர் வீதியில் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி


(சாவகச்சேரி)

மீசாலை-புத்தூர் வீதியில் வெளியொன்றில் நேற்று முன்தினம் மாலை 2.55 மணியளவில் இளைஞன் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன் இச் செய்தி அச்சுக் போகும் வரை அடையாளம் காணப்படவில்லை.

குறித்த இளைஞன் 18வயதிற்குபட்டவர் எனவும் கௌரிகாப்புக் கையில் கட்டியுள்ளதாகவும் கழுத்தில் இந்துத் தெய்வங்களான பிள்ளையார், (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் உரைக்குப் புலிகள் குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் சர்வதேச சமூகம் எடுத்துள்ள கவனத்தை அரசு திசை திருப்ப முயற்சிப்பதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதன் அடிப்படையில் சார்க் கூட்டத் தொடரை அரசு பயன்படுத்தியுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்திச் செல்லப்பட்ட இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நவரட்ணராஜா வீதியில் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் சசிதரன்(வயது-20) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் கோண்டாவில் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நின்ற சமயம் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுததாரிகள் கடத்திச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல் இரு பொதுமக்கள் உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் மிக் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.


புதுக்குடியிருப்புப் பிரதேச, மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இரு மிக் ரக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத் தாக்குதலில் ஒரு பிள்ளையின் தந்தையான மூங்கிலாறு உடையார்கட்டைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர். நால்வர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவில் உள்ள கடற்புலிகளின் தலைமையகத்தைத் தாக்கி அழித்துள்ளதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தம் மட்டும் செய்யவில்லை பணமும் கைமாற்றப்பட்டுள்ளது


### சிறிபதி சூரியாராட்சி தகவல்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் மட்டும் செய்து கொள்ளப்படவில்லை பணமும் வழங்கப்பட்டுள்ளது என முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் (04 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழக மீனவர்கள் சுடப்பட்டமைக்கும் இலங்கைக் கடற்படைக்கும் தொடர்பில்லை

### இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

(புதுடில்லி)

தமிழக மீனவர்கள் சிலர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் எந்தவித தொடர்புமில்லை என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையிலான சந்திப்பின் போது அவர் இக் கருத்தினைத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இலங்கையின் பயங்கரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு இந்தியா தனது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும் என இந்தியப் பிரதமர் கூறியதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்டம் இரவு 7-4 மணிவரை

யாழ்.குடாநாட்டில் இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என பலாலி படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுமே மாலை 6 மணிமுதல் அதிகாலை 5மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் மத்தியில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்படும் நேரம் குறித்துக் குழப்பநிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

மிதிவெடி அகற்றும் செயற்பாட்டிற்கு பூரண ஆதரவு வழங்குவோம்

(c-670) சர்வோதயம் unicef

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

# இளங்கன்று அயர்லாந்து அணி தென்னாபிரிக்காவிடம் தோல்வி

(ஜமேக்கா)

அயர்லாந்தை ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன் தினம் குஜானாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் தென்னாபிரிக்க-அயர்லாந்து அணிகள் மோதின.

போட்டி மழைகாரணமாக 35 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் ஸ்மித் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 35 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களை பெற்றது.

இதில் வைற் 30 ஓட்டங்களையும் மோர்ஹான் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக லாங்வெல்ட் மூன்று விக்கெட்டுக்களையும் பொலக் ,ஹோல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து டக்வேத் லூயிஸ் முறையில் 35 ஓவர்களில் 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 31.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் ஜக் ஹலீஸ் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும் பிறின்ஸ் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் மற்றும் ஸ்மித் 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அயர்லாந்து அணி சார்பாக ராங்கின் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை சூப்பர் 8 ஆட்ட முடிபுகளின்படி (நேற்று நடைபெற்ற இங்கிலாந்து-இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டி தவிர) அவுஸ்திரேலியா 6 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும் நியூசிலாந்து 6 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் இலங்கை 4 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா நான்காவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் சப்பல் இராஜினாமா

(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் சப்பல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஈமெயில் மூலம் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவாருக்கு அனுப்பியுள்ளார்.

அவர் அக் கடிதத்தில் தனது குடும்ப சூழ்நிலை மற்றும் சொந்தக் காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமா செய்வதாகக் கூறியுள்ளார். சப்பல் கடந்த 22 மாதங்களாக இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக உள்ளார். தற்போது நடந்து கொண்டிருக்கும் உலகக்கோப்பைக் கிரிக்கெட்டில் இந்திய அணி சூப்பர் எட்டு பிரிவுக்குக்கூட தகுதி பெறவில்லை எனது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# முன்னாள் கிரிக்கெட்சபை தலைவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை

குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டிருந்த இலங்கைகிரிக்கெட் சபை முன்னாள் தலைவர் திலக சுமதிபாலவுக்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் அஜித் அனவர்த்தன நேற்று இத் தீர்பினை வழங்கினார். இதனைத் தவிர 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளார்.

இந்த அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் ஆறு மாத மேலதிக சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென நீதிவான் குறிப்பிட்டுள்ளார். திலங்க சுமதிபால மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிவான் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளைக்காண பாதாள உலகக்குழுவின் தலைவர் தம்மிக்க அமரசிங்கவை புத்திக கொடகே என்ற பெயரில் போலி கடவுச் சீட்டைப் பயன்படுத்தி அழைத்துச் செல்ல உதவியதாக திலங்க சுமதிபால மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பில் இரகசியப் பொலிஸார் வழக்கினைத் தாக்கல் செய்திருந்தனர். தீர்பை அடுத்து பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி இத் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீட்டு நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதனை அடுத்து 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணை மற்றும் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையிலும் திலங்க சுமதிபாலவை விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-3)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(காரைநகர்)

இலங்கை போக்குவரத்துச் சேவையின் காரை நகர்ச்சாலை அலுவலகம் மாதிரிச்சாலை அலுவலகமாக தரமுயர்த்தும் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு காரைநகர் டிப்போவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ச-246)

## மகோற்சவம்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 10.30 மணிக்கு கொடியேற்றமும் நடைபெறவுள்ளதுடன் 9 ஆம் திருவிழாவான புது வருடப்பிறப்பன்று மாலை 3.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் வியாவில் தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ச-246)

# காரைநகர் கடற்படைத் தளத்தினூடாக தனியாரின் பொருட்கள் இறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தனியார் வர்த்தகர்களினால் எடுத்துவரப்பட்ட யாழ்.குடாநாட்டுக்குத்தேவையான அத்தியாவசிய பொருட்கள் உட்பட்ட பொருட்கள் காரைநகர் கடற்படைத் தளத்தில் இறக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வர்த்தகர்கள் பொருட்களை கப்பலில் எடுத்துவருவதையடுத்து கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் காங்கேசன்துறை மயிலிட்டி ஆகிய துறை முகங்களில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து காரைநகர் கடற்படைத் தளத்தினூடாக தனியாருக்கான இப் பொருட்கள் இறக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பொருட்கள் உடனுக்குடன் இறக்கப்படுவதால் தேவையான பொருட்களை கப்பல் மூலம் தாமதமின்றி எடுத்துவர முடியுமென வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

அனுசரணை:-

மக்கள் வங்கியின் மகளிர் அதிர்ஷ்ட மாதம்

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE




மக்களின் உயிர்நாடியான மக்கள் வங்கியில் 2007 மார்ச் 08-ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 08-ம் திகதி வரை மகளிர் அதிர்ஷ்ட சேமிப்புப் பத்திரத்தினைப் பெற்றுத் தங்கள் சேமிப்பினை இரண்டு மடங்காக்குங்கள்!

உங்கள் அதிர்ஷ்டத்தினைப் பரீட்சிக்க தங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக்கு இன்றே விரையுங்கள்!

தமிழ் புத்தாண்டு தினத்தன்று அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு மக்கள் வங்கிக் கிளையிலும் நடைபெறும்.

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி

## மரண அறிவித்தல்



**நவரட்ணம் விஜயரட்ணம்**
**(ஓய்வு பெற்ற மருந்தாளர்)**

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ந.விஜயரட்ணம் அவர்கள் நேற்று (04.04.2007) காலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் பொன்னம்மா தம்பதியினரின் மகனும் இராசையா இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும்,

பேபி இந்திராவின் அன்புக் கணவரும் விஜேந்திரன்,விஜிதா ,இந்துமதி, ரவீந்திரன், சசீந்திரன் ஆகியோரின் தந்தையும், அசோகன் (கனடா), மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும், பத்மாவதி ஷியாமளாவதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனரும்,

ஆதிரா ,அக்ஷிகா,ஆரதி ,லோஜிதன்,சுஜாமதி , சுரேனுஜன்,மதுனுஜன்,நேருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2007) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி,*
ஆதிரா மருந்தகம்,
புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்.
குடும்பத்தினர்.

(803)

# வவுனியா வைத்தியர்கள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டம்

(வவுனியா)

வைத்தியர்களிடம் இருந்து இனந்தெரியாதவர்களால் பல மில்லியன் ரூபா கப்பம் கோருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலையில் நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தது. எனினும் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் இயங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்களிடம் இருந்து இனந்தெரியாத சிலர் பல மில்லியன் ரூபாக்களை கப்பமாகக் கோருவதனையடுத்தே இப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக வைத்தியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனந் தெரியாதவர்களால் விடுக்கப்படும் தொலைபேசி அழைப்பில் கடுமையான வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

அத்துடன் கோரப்படும் பணம் வழங்கப்படாவிடின் பிள்ளைகள் அல்லது மனைவி கடத்தப்படுவார் என எச்சரிக்கப்படுவதாகவும் வைத்தியர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து வவுனியா பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கப்பம் கோரப்படுவதால் வைத்தியர்கள் சிலர் பிரதேசத்தை விட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## சமளங்குளம் பகுதியில் ஆணும் பெண்ணும் கொலை

வவுனியா வடக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆழஊடுருவும் படையணியினர் நடத்திய தாக்குதலில் ஆண் ,பெண் உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

சேமமடுவுக்கும்,ஆனந்தப்புளியங்குளத்திற்கும் இடையில் உள்ள சமளங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

சைக்கிளில் சென்ற பொதுமக்களின் மீது கிளைமோர் தாக்குதலை நடத்திய படையினர் பின்னர் அவர்களை கத்தியினால் குத்திக் கொலை செய்துள்ளனர் என கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன.கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. (எ-5)

**விற்பனைக்கு**

**றலி கான்ரில், சிறுவர்களுக்கான துவிச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு.**

தொடர்புக்கு:-ப.விஜயகுமார் 40, கடைச்சாமி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 3077
(804)

திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



❖ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
❖ விசேட வைபவங்கள்
❖ சுற்றுலாக்கள் போன்ற அனைத்துச் சேவைகளுக்கும், புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட]

குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்பு; ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P: 0777903090,0777246117

> படிப்புக்கள் அனைத்திலும் அதி உன்னதமாக படிப்பு மனிதன் எப்படி இருக்கவேண்டும் எதைத்தேட வேண்டும் என்ற படிப்புத்தான்.
>
> -பிளேட்டோ

வலம்புரி

# யாழ்.குடாநாட்டுக் கல்வியின் அளவீட்டுக்கருவியாகும் 10 'A'

யாழ்ப்பாணத்தின் கல்விநிலை எவ்வாறு உள்ளது என்ற கேள்விக்கு ஆய்வுரீதியான விடைகள் எதுவுமே கிடையாது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளும் உயர் தரப்பரீட்சைப் பெறுபேறுகளுமே யாழ்ப்பாணக் கல்வி நிலையை தீர்மானிப்பதாக இருக்கின்றன.

பரீட்சைப் பெறுபேறுகள் கல்வியின் அடைவு மட்டத்தை தீர்மானிக்கக்கூடிய சுட்டெண் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் கல்வி நிலை குறித்த அளவீட்டில், பரீட்சைப் பெறுபேறு என்பதற்குப் பதிலாக சகல பாடங்களிலும் 'A' எடுத்த மாணவர்களின் எண்ணிக்கையில் வைத்து குறித்த பாடசாலையின், வலயத்தின், மாவட்டத்தின் கல்வி மட்டம் கணிப்பிடப்படுவது பரிதாபத்திற்குரியதாகும்.

குறிப்பாக க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 10 'A' எடுத்த மாணவர்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு அந்தப் பாடசாலை முன்னிலைப்படுவதாக அளவீடு செய்யப்படுவது பொருத்தமானதா? அது கல்வியின் வளர்ச்சி நிலையை முழுமையாக வெளிப்படுத்தக்கூடியதா? என்பது பற்றி கல்வியாளர்கள் சிந்தித்தாக வேண்டும்.

சாதாரண தரப்பரீட்சையில் சில மாணவர்கள் 10 'A' பெறுபேறுகளை பெற்றிருக்கும் அதே நேரம் அதே பாடசாலையை சேர்ந்த பல மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் உயர் தரத்தில் கற்பதற்கான தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாமல் இருக்கலாம். இங்கே கல்வியின் தரத்தைத் தீர்மானிக்கும் கருவியாக சித்தி இன்மையையே எடுத்துக்கொள்ள வேண்டும்.

உயர் தரத்தில் கற்பதற்கான தகுதிப் பெறுபேறுகளை கொண்ட மாணவர்களை விடுத்து, உயர் தரத்தில் கற்பதற்கான ஆகக்குறைந்த பெறுபேறுகளை பெறமுடியாத மாணவர்களின் நிலை குறித்தும், அவர்களின் எதிர்காலம் குறித்தும் ஆராய்வது கட்டாயமானதாகும்.

இத்தகையதோர் ஆய்வினை மேற்கொண்டால் யாழ்ப்பாணக் குடா நாட்டின் கல்வி வீழ்ச்சி அடைந்திருப்பதை காணமுடியும்.

அதேசமயம் நேர்மையானதோர் கணிப்பீட்டை மேற்கொண்டால்-யாழ்ப்பாண மண்ணின் கல்வித்தரம் கொஞ்சமேனும் பாதுகாக்கப்படுவதில் கிராமியப் பாடசாலைகளினதும்;வசதிகள், பௌதிக வளங்கள் குறைந்த பாடசாலைகளினதும் பங்களிப்பே கணிசமானதாக இருப்பதை கண்டு கொள்ள முடியும்.

எனினும் அத்தகைய பாடசாலைகளையும் அந்த பாடசாலைகளில் கல்வி கற்று நல்ல பெறுபேறுகளை பெற்றுத் தந்த மாணவர்களையும் பாராட்டுவதில் கல்விச் சமூகம் பின்நிற்கின்றது.

மாறாக பிரபல்யமான பாடசாலைகளில் இருக்கக்கூடிய 10 'A' பெறுபேறுகளை போற்றி துதி செய்வதுடன் கல்விக் கணிப்பீடு முடிந்து விடுகிறது.

இத்தகைய ஒரு தலைப்பட்சமான பார்வையினால் பிரபல்யமான பாடசாலைகளில் கற்று, பரீட்சை பெறுபேறுகளில் நல்ல முடிபுகளை பெற முடியாத மாணவர்களும் பாடசாலையின் பெயரைக்கூறி பரீட்சை பெறுபேற்று வீழ்ச்சியில் இருந்து மீண்டு கொள்கின்றனர்.

இது அந்த மாணவர்களின் எதிர்கால நலனுக்கு ஆரோக்கியமானதல்ல. இதன் மறுபுறத்தில் நல்ல பெறுபேறுகளை பெற்ற கிராமப்பாடசாலை மாணவர்கள், பாடசாலையின் பெயரால் பின்தள்ளப்படுகின்றனர்.

ஆக யாழ்.குடாநாட்டின் கல்விப் புலத்தில் இருக்கக்கூடிய பாடசாலைகளின் ஏற்ற இறக்க பெறுமானங்கள் சீராக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களிடையே 'முயற்சி' என்ற 'திருவினை' சாத்தியமாகவும் பிரபல்யமான பாடசாலைகளில் நிலவும் அனுமதிக்கான நெருக்கீடுகள் தவிர்க்கப்படவும் முடியும்.

# இமயமலைக்கு ஆபத்து 2030ற்குள் பேரழிவு அபாயம்

## விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல்

(நியூயோர்க்)

2030 ஆம் ஆண்டுக்குள் இமயமலைக்கு ஆபத்து ஏற்பட்டு உலகில் பேரழிவு அபாயம் ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் இண்டர் கவர்ன்மெண்டல் பானல் அன்ட் கிளைமெசேன்ஜ் என்ற நிறுவனம் தனது ஆராய்ச்சியை கட்டுரையாக வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது உலகில் அதிகரித்து வரும் வெப்பத்தின் காரணமாக உலகில் பல மாற்றங்கள் வரவிருக்கின்றன. கால நிலை மாற்றங்கள் மனிதனின் வாழ்க்கையை பாதிக்கும் வகையில் அமைய கூடும். பெருகி வரும் தட்ப வெப்பம் மற்றும் சுற்றுப்புற சூழல் மாசுபாட்டால் ஆசியாக் கண்டத்தில் உள்ள இமயமலையின் பாதிக்கும் மேற்பட்ட பனி சிகரங்கள் உருகி இமயமலையே பிளந்து விட கூடிய அபாயம் ஏற்பட போகிறது.

வருகிற 2030 ஆம் ஆண்டு இந்த மாற்றம் நடக்கலாம். மேலும் கண்டத்தில் பல நாடுகளில் பட்டினி சாவுகள் ஏற்படும். அமெரிக்கா,லத்தீன் நாடுகளில் கடும் சூறாவளி மற்றும் சுனாமி ஏற்பட்டு கண்டமே அழியும் சூழல் ஏற்படும்,பங்களாதேஷ் மற்றும் 100க்கும் மேற்பட்ட சிறு சிறு தீவுகள் காணாமல் போய் விடும் அபாயமும் உள்ளது.

மேலும் விண்வெளியில் அதிகரித்து வரும் கார்பன் மோனாக்சைடு மற்றும் கார்பன்டை ஆக்சைடு வாயுக்களால் பூமியின் வெப்பம் நாளுக்கு நாள் ஏறி வருகிறது. இதனால் துருவ பகுதிகள் உருக தொடங்கி நீரின் பரப்பு உயரும் அபாயமும் உள்ளது. இப்போது இருக்கிற கடல் மட்டம் சிறிது உயர்ந்தாலும் இன்றிருக்கும் பல தீவுகள்,நாடுகள் கடலுக்குள் மூழ்கும் அபாயமும் உள்ளது.

கடந்த 50 ஆண்டுகளுக்கிடையே உயர்ந்த இந்த வெப்ப நிலைக்கு மனிதர்களாகிய நாமே காரணம். இப்போது இமய மலையில் 5 இலட்சம் கிலோமீற்றர் பனிமலை குன்றுகள் உறைந்து கிடக்கின்றன. வருகிற 2030 க்குள் 4 இலட்சம் பனிமலை குன்றுகள் உருகி விடுமாம். மீதி ஒரு இலட்சம் குன்றுகள் பாக்கியிருக்குமாம். மேலும் இந்த அதிக வெப்பத்தால் மற்றக் கண்டத்தை விட ஆசியா, ஆபிரிக்கக் கண்டங்கள்தான் அதிகளவு பாதிக்கும் என்றும் கூறப்படுகின்றது. ஏனென்றால் சூரியகதிர்கள் அதிகம் செங்குத்தாக இந்த கண்டங்களில் தான் விழுகின்றனவாம்.

சில நாடுகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட போவதில்லை என்றும் இதில் ஆறுதலாய் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடா ,ரஷியா,நியூசிலாந்து போன்ற நாடுகளில் அதிக அளவு நன்மைகள் ஏற்படக் கூடுமாம். இங்கு இயற்கையின் எந்த சீற்றமும் இருக்காது என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கை தயாரிப்பதில் 130 நாடுகளில் இருந்து 2500 விஞ்ஞானிகள் பங்கேற்றுள்ளனர். இந்த ஆய்வறிக்கை 1400 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த அறிக்கையில் முதல்பாகம்தான் இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதன் 2ஆம் பாகம் நாளை பிரான்சு நாட்டில் நடக்கும் விஞ்ஞானிகள் மாநாட்டில் வெளியிடப்படுகிறது. அந்த 2 ஆம் பாகத்தில் என்னென்ன பூகம்பங்கள் கிளம்ப காத்திருக்கின்றனவோ! (ச-5)

# இலங்கையுடன் கூட்டுரோந்து இந்திய அரசு ஏற்கக் கூடாது

## கருணாநிதி இந்தியப் பிரதமருக்கு கடிதம்

(சென்னை)

இலங்கை கடற்படையுடன் கூட்டு ரோந்து மேற்கொள்ளும் இலங்கை அரசின் யோசனையை மத்திய அரசு ஏற்கக் கூடாது என்று முதல்வர் கருணாநிதி பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார். மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை தடுக்கும் வகையில் இந்திய-இலங்கை கடற்படையினர் ஒருங்கிணைந்த ரோந்து நடவடிக்கையில் ஈடுபடலாம் என்று இலங்கை யோசனை தெரிவித்துள்ளது.

இதை இந்தியா பரிசீலனை செய்து வருவதாகவும்,இறுதி முடிபு எடுக்கப்படவில்லை என்றும் வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனன் டில்லியில் தெரிவித்தார். இந் நிலையில் தமிழக சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்புதுறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி ஆகியோருக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் கூட்டு ரோந்து வேண்டாம் என்று முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

கூட்டு ரோந்து மேற்கொள்வதால் இப்பிரச்சினை மேலும் சிக்கலாகிவிடும் என்றும் அவர் சுட்டிககாட்டியுள்ளார். மீன் பிடித் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு கடலில் மீன்பிடிக்கச் செல்லும் அப்பாவிகள் மீது கடற்படையினர் தாக்குதலை நடத்தக் கூடாது என இலங்கை அரசு உறுதியாகத் தெரிவிக்க வேண்டும் என்று மத்திய அரசு கூற வேண்டும்.

இலங்கை அரசின் கூட்டு ரோந்து யோசனையை மத்திய அரசு ஒருபோதும் ஒப்புக்கொள்ளக் கூடாது. மேலும் தூத்துக்குடி கடல் பகுதியில் ஹெலிகொப்டர் வசதியுடன் கூடிய கண்காணிப்பு நிலையம் அமைக்க வேண்டும். இந்த கடலோரக் காவல் நிலையத்தை கிழக்கு கமாண்டர்கள் கட்டுப்பாட்டில் மன்னார் வளைகுடா மற்றும் இந்திய கடல் பகுதிகளில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-3,5)

# தாக்குதல் நிறுத்தப்படும்வரை மீளக் குடியேற மாட்டோம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தொடர்ந்து இடம் பெற்று வரும் ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை தாம் சொந்த இடத்திற்கு மீளச்சென்று குடியிருக்கமாட்டோம் என மோதல்களால் இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து பாடசாலைகள், ஆலயங்கள் என தாம் தங்கியிருக்கவும், தற்போது தொடர்ந்து மக்கள் இடம் பெயர்வதால் மக்கள் போதியளவு இடவசதி இன்றி தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்லக் கஷ்டப்படுவதாக இடம் பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.தமது நிலையை கருத்தில் கொண்டு செயற்படுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-5)

# வெட்டப்பட்ட பள்ளம் மீள நிரப்பப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

இராணுவக் காவலரண்களுக்கு முன்பாக வீதிக்குக் குறுக்கே வெட்டப்பட்டிருந்த பள்ளம் இராணுவத்தினரால் நிரப்பப்பட்டுள்ளது. யாழ்.நாவலர் வீதியில் புகையிரதப் பாதைக்கு அண்மையில் உள்ள காவலரணுக்கு முன்பாக வெட்டப்பட்ட பள்ளமே மீள நிரப்பப்பட்டுள்ளது.

வீதிகள் குறுக்காக வெட்டப்பட்டுள்ளமை குறித்து சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினர் யாழ். இராணுவத்தினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை வண்ணை சிவன் வடக்கு வீதியில் உள்ள காவலரணுக்கு அருகில் வீதிக்குக் குறுக்கான பள்ளம் வெட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# பதிவு செய்யாத இணைப்புக்களை வைத்திருப்பவர்களை பதியக் கோரிக்கை

## எஸ்.எம்.எஸ்.மூலம் டயலொக் அறிவிப்பு

டயலொக் இணைப்புக்களில் பதிவு செய்யப்படாத இணைப்புக்களைப் பெற்றுள்ள வாடிக்கையாளர்களை பதிவு செய்யுமாறு உரியவர்களுக்கு எஸ்.எம்.எஸ்.மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.எஸ்.எம்.எஸ்.ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள விபரங்களை பூரணப்படுத்தி எஸ்.எம்.எஸ். கிடைத்ததில் இருந்து 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களின் பெயர், முகவரி,தேசிய அடையாள அட்டையின் போட்டோப்பிரதி, இணைப்புப் பெற்றபோது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டிலக்கம் என்பவற்றை 0777 087917 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு பக்ஸ் செய்யுமாறு எஸ்.எம்.எஸ்.மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அகதிகளை ஏற்றிச் சென்ற தமிழக மீனவர்கள் கைது

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்துக்கு 41 அகதிகளை ஏற்றிசென்ற விசைப்படகை தமிழகப் பொலிஸார் செவ்வாய்க்கிழமை கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக இராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேரிடம் விசாரணை நடத்திவருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 10 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆண்கள் 14 பெண்கள் ,5 ஆண் குழந்தைகள், 10 பெண் குழந்தைகள் பைபர் கிளாஸ் படகுகளில் புறப்பட்டு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்களின் விசைப்படகை வழிமறித்த இலங்கை படகோட்டிகள், அவர்களது படகில் இருந்த 41 அகதிகளையும் இராமேஸ்வரம் மீனவர்களது விசைப்படகில் ஏற்றிவிட்டு திரும்பிச் சென்று விட்டனர் எனவும் கைதான மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# மட்டக்களப்பில் மூவர் சுட்டுப் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசத்தில் மூன்று இளைஞர்கள் நேற்று அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமணம் செய்து அம்பாறை பெரிய நிலாவனையில் வசித்து வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த பூபால பிள்ளை கமலேஸ்வரன் (வயது-25) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதைவிட மட்டக்களப்பு ஐயங்கேணியில் கூலித் தொழிலாளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் வீட்டில் இருந்தவேளை வீட்டிற்கு வெளியே வருமாறு அழைக்கப்பட்டு அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் சூட்டுக் காயங்களுடன் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ச-3)

# அரசசார்பற்ற நிறுவனத்தின் வாகனத்தில் கைக்குண்டு மீட்பு

திருகோணமலை நகருக்குள் நுழையும் பிரதான பொலிஸ் சோதனைச் சாவடியில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் இருந்து நேற்றுப் பகல் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அகிம்சை சமாதானப்படை என அவ் வாகனத்தில் எழுதப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்துடன் இரண்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும் வாகனத்தில் கைக்குண்டு இருந்ததை தாம் காணவில்லை என கைது செய்யப்பட்டவர்கள் கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

# எட்வேட் குணசேகர எம்.பியின் உயிருக்குக் கொலை அச்சுறுத்தல்

## அவரே சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

தொலைபேசியூடாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் எட்வேட் குணசேகர நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் பாதுகாப்பு வழங்க வேண்டுமெனவும் கோரினார்.

இதேவேளை தனது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படின் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டுமென எட்வேட் குணசேகர சபையில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், அவர் விடுத்த சிறப்புரிமைக் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து அதனை சிறப்புரிமைக் குழுவிடம் சமர்ப்பிப்பதாக உறுதியளித்துள்ளார். (ச)

# முகமாலையில் தாக்குதல்

முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது மூன்று தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை வவுனியா மாமயிலங்குளம் பகுதியில் ஊர்காவற்படை வீரர் மீது நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த ஊர்காவற் படைச் சிப்பாய் மரணமடைந்துள்ளதாகவும் ஊடக மத்திய நிலையம் மேலும் கூறியுள்ளது. (ச-3)

# வலுவிழந்துள்ள விடுதலைப்புலிகளுக்கு ரணில் பிராணவாயு வழங்குகின்றார்

## ஊடக அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புத் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எதிர்க்கட்சித் தலைவரால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

தெற்கில் எந்தவொரு இலக்கையும் தாக்கும் திறமை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துக்கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட தலைவர்களின் வழிநடத்தலில் படையினர் வெற்றிகளைப் பெற்று வருகின்றனர்.

வலுவிழந்துள்ள விடுதலைப்புலிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பிராணவாயு வழங்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளாரா? என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை செயற்படுத்தப்பட்ட காலத்தில் சோதனையிடப்படாத பொதிகளில் விமானப் பாகங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் தீர்வை வழங்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க அரசாங்கம் போதுமான சக்தியை பயன்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அரசியல் இலாபம் பெற முயற்சிப்பதாக ஊடகத்துறை அமைச்சர் குற்றஞ் சுமத்தியுள்ளார். (ச-3)

# ஒப்பந்தம்...

நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நேர்மையாக செயற்படுமானால் இது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்க வேண்டும் என ஜெயலத் ஜெயவர்த்தன கூறினார்.

இந்த தெரிவுக் குழுவைக் கோரியபோது தானும் மங்கள சமரவீரவும் [illegible]தலைப் புலிகள் என முத்திரை குத்தப்[illegible]தாக சிறிபதி சூரியாராட்சி குறிப்பிட்டார். (ச-3)

# தமிழக ...

தமிழக மீனவர்கள் சிலர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் இலங்கைக் கடற்படையினருக்குத் தொடர்பில்லை என்பதைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் மன் மோகன்சிங் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இச் சந்திப்பின்போது இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# கடத்திச்...

சென்ற போது அவர்களிடமிருந்து தப்பிச் சென்றஇளைஞன் வீடொன்றினுள் பாய்ந்து ஓடிய போது துரத்திச்சென்ற ஆயுததாரிகள், ஆட்டுக் கொட்டில் ஒன்றில் வைத்து இளைஞன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு கோப்பாய்ப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

# சகலரும் ஏற்கக் கூடிய...

ஜனாதிபதி சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார். சார்க் உச்சி மாநாட்டின் பார்வையாளர்களில் ஒருவராகக் கலந்து கொண்ட றிச்சர்ட் பௌச்சரை ஜனாதிபதி சந்தித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தெற்கிலுள்ள சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வகட்சி மாநாடு உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்படும். இதன் மூலம் பொதுவாக சகலரும் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைக்கப்படும்.

ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் மிகவும் அக்கறையுடன் செயலாற்றி வருகின்றது என்றார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உச்சி மாநாட்டில் நேற்று ஆற்றிய உரையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களையிட்டு அமெரிக்கா இராஜாங்க உதவிச் செயலாளர் றிச்சர்ட் பௌச்சர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்காக அமெரிக்காவின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். (ச-3,5)

# மீசாலை...

முருகன் படம் போட்ட நூல் ஒன்று அணிந்திருந்ததாகவும் மற்றும் நீல நிற முக்கால் அளவு காற்சட்டையும் சாம்பல் நிற மேற்சட்டையும் அணிந்திருந்ததாகவும் விசாரணைகளில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிரேத பரிசோதனையின் பின், உறவினர் சடலத்தை அடையாளம் காணும் பொருட்டு ஐந்து தினங்கள் பிரேத அறையில் வைக்குமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

# அரசில்...

யோருக்கு அனுமதிகள் வழங்க முடியாது.

அரசாங்கத்தில் பிரதி அமைச்சர் பதவிகளில் உள்ள சில முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் கட்சியில் இணைவதற்கு ஏதுவாக ரணிலுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு கட்சியிடம் கோரி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகள் பதவி நிலைகளில் கட்சியின் கட்சி தாவிய உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-5)

# சர்வதேசம் எடுத்துள்ள முயற்சியை...

தமிழ்நெற் இணையத்தளத்திற்கு அவர் வழங்கிய நேர்காணலின்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சார்க் போன்ற மாநாடுகள் நடைபெறும் போது தமிழ் மக்களின் குரல் மிகவும் முக்கியமானது. அரசாங்கத்தின் பாரபட்சமான நடவடிக்கைகளினாலும் சர்வதேசம் மற்றும் பிராந்திய வெளிவிவகார கொள்கைகளினாலும் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டு இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற 12-வது சார்க் உச்சி மாநாட்டின் போது அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மக்களின் உரிமைக்கான சமூகத்திட்டத்தை உருவாக்கியிருந்தார்.

இந்தத் திட்டத்தின்படி உறுப்புரிமை நாடுகள் மனித உரிமை பாதுகாப்பு, மக்களின் அடிப்படைச் சுதந்திரம் போன்றவற்றை அவதானித்தல் வேண்டும். ஆனால் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கொழும்பு மேற்கொண்டு வருகின்றது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுவதில்லை. மக்களின் உரிமைக்கான சமூகத் திட்டத்திற்கு அமைய அரசாங்கம் மீது கடுமையான கண்டனங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த நவீன சமூகத்தில் பொது மக்களுக்கு எதிராகச்செயற்பட்டு வரும் அரசாங்கத்திற்கு எந்த நாடுகளும் ஆதரவு கொடுப்பதில்லை. இந்தத் திட்டத்தில் பெண்களினதும் சிறுவர்களினதும் உரிமைகளைப் பாதுகாக்க சிறப்புச் சரத்துக்கள் உண்டு. எமது தாயகப் பகுதிகளில் உள்ள சிறார்களின் நிலைமைகளை நாம் கூறுவதால் சிங்களப் பகுதிகளிலுள்ள சிறார்களின் நிலைமைகளைப் புறக்கணித்ததாக அர்த்தமாகாது.

தென்னிலங்கையில் 35 ஆயிரம் சிறார்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சிறார்களின் நலன் தொடர்பாக இது ஒரு மிகப் பெரிய மனிதாபிமானப் பிரச்சினை.

இலங்கை ஒரு புத்திசுவாதீனமற்ற நிலையை அடைந்து வருகின்றது. மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அல்லது வன்முறைகளுக்கு சாட்சிகளாகும் சிங்கள மக்கள் கூட மாற்றப்படுகின்றனர் அல்லது அடக்கப்படுகின்றனர். அரசாங்கத்தின் இந்த மனவியாதி காலத்தைக் கடத்தும், கவனத்தை திருப்பும் யுத்திகளைக் கொண்டது.

தனது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்குவேறு எந்த வழிகளும் அற்ற நிலையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் சூழலை மாற்றலாம் என அது தவறாக நம்புகின்றது.

விடுதலைப்புலிகள் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு. அது தமிழ் மக்களுக்கான அரசாங்கத்தை நடத்தி வருகின்ற பொறுப்பிலுள்ளது. வன்முறைகளைப் பிரயோகிப்பவர்களின் மீது அது பதில் தாக்குதல்களை நடாத்த நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படும் அரசாங்கத்தைத்தவிர ஏனையோருக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக இருக்கமாட்டார்கள் என்றார் அவர். (ச-5)




# முல்லைத்தீவில் விமானத்...

தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இவ்வான் தாக்குதல்பற்றி தமிழீழ விடுதலைப்புலிகளின் மனித உரிமை தொடர்பகத்தின் பேச்சாளர் செல்வி கருத்துத் தெரிவிக்கையில்,

தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் கடற்புலிகளின் முகாம் எதுவும் கிடையாது. அது முற்றிலும் பொது மக்கள் குடியிருப்புப் பகுதியாகும். கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான செயற்கை உறுப்புக்களை வழங்கும் வெண்புறா நிறுவனத்தின் கட்டடங்களே சேதமடைந்துள்ளன.

அதிலும் சர்வதேச கண்ணிவெடிஎதிர்ப்பு தினமான நேற்று அரசாங்கம் அதனை எவ்வாறு மதிக்கின்றது என்பதையே இது காட்டுகின்றது எனக் குறிப்பிட்டார். (ச-5)




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.